# ‘குறைதீர்ப்புத் திட்டம்’ என்பது குழந்தைப் பருவத்தில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளானவர்களுக்கு நிகழ்ந்த பாதிப்பை ஏற்றுக்கொள்வதோடு அதற்கான பொறுப்பினை அந்நிறுவனங்கள் ஏற்கத் செய்வதுமாகும்



‘குறைதீர்ப்புத் திட்ட ஆதரவு சேவைகள்’ இலவசமானவை மற்றும் சுயாதீனமானவை அவற்றினால் முடியுமானவை:

- தகுதி பற்றிய தகவல்களை வழங்குதல் மற்றும் பிற விருப்பத் தெரிவுகள் பற்றிக் கலந்துரையாடல்
- விண்ணப்பத்தை நிரப்ப உங்களுக்கு உதவுதல்
- உணர்வுபூர்வமான ஆதரவுதவியை வழங்குதல்
- உங்கள் சார்பாக ‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’த்துடன் பேசுதல்.

மாற்றுத்திறனாளிகள், பராமரிப்பை விட்டு வெளியேறியவர்கள் மற்றும் சிறுவர்களாக இருந்தபோது புலம் பெயர்ந்தவர்கள் உட்பட கலாச்சார ரீதியாக வேறுபட்ட பின்னணியில் உள்ளவர்களுக்கும் சிறப்புத்தேர்ச்சி பெற்றோரின் சேவைகள் கிடைக்கின்றன.

## ‘தேசிய குறைதீர்ப்புத் திட்டத்’துடன்தொடர்பு கொள்க

உங்கள் விருப்பத் தெரிவுகளைப் பற்றி மேலும் அறிய அல்லது ‘குறைதீர்ப்புத் திட்ட’ ஆதரவு சேவைகள் உடன் இணைப்பை ஏற்படுத்த, **1800 737 377** இல் அழைக்கவும்

திங்கள் முதல் வெள்ளி வரை, காலை 8 - மாலை 5 மணி வரை கிடைக்கும் AET

உங்கள் மொழியில் உதவிபெற ‘மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு சேவை’ யை **131 450** இல் அழைக்கவும்

Interpreter

**அல்லது nationalredress.gov.au இற்குச் செல்லவும்**

National Redress Scheme

DSS2988.0623

Australian Government

# National Redress Scheme

## நிறுவனங்களில் இருந்தபோது சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு உட்பட்டவர்களின் பாதிப்பை ஒப்புக்கொள்ளல்



Tamil

## ‘தேசிய குறைதீர்ப்புத் திட்டம்’ என்றால் என்ன?

நிறுவனங்களில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் பற்றிய ரோயல் கமிஷனின் பரிந்துரைகளை அடுத்து ஆஸ்திரேலிய அரசாங்கம் ‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’த்தை ஏற்படுத்தியது.

ஐந்து ஆண்டுகளில், ‘ராயல் கமிஷன்’ 16,000 க்கும் மேற்பட்ட துணிச்சலான நபர்களிடமிருந்து அவர்களின் அனுபவங்களைக் கேட்டறிந்தது. நிறுவனங்களில் தாம் இருந்தபோது தமக்கு நடந்த பாலியல் துஷ்பிரயோகம் பற்றிய அனுபவங்களை அவர்கள் பகிர்ந்து கொண்டனர்.

## ‘நிறுவன ரீதியான சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம்’ என்பதன் அர்த்தம் என்ன?

நிறுவன ரீதியான சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் என்பது ஒரு நிறுவனத்தின் வளாகத்தில் அல்லது நிறுவனத்தின் செயல்பாடுகள் நடந்த இடத்தில் அல்லது ஒரு நிறுவனத்தின் அதிகாரியால் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஒருவர் ஆட்பட்டதைக் குறிக்கும். ஒரு நிறுவனம் என்பது பாடசாலை, தேவாலயம், மசூதி, கோவில், யூத வழிபாட்டுத்தலம், சமய பரப்பு தளம், அனாதை இல்லம், வளர்ப்புப் பராமரிப்பகம், மருத்துவமனை, தடுப்பு மையம் அல்லது விளையாட்டுக் கழகம் போன்ற ஒரு அமைப்பைக் குறிக்கிறது.

## ‘குறைதீர்ப்புத் திட்ட’ த்திற்கு யார் விண்ணப்பிக்க முடியும்?

பின்வருவன பொருந்துமாயின் நீங்கள் ‘குறைதீர்ப்புத் திட்ட’ த்திற்கு விண்ணப்பிக்க முடியும்:

- 18 வயதுக்கு கீழ்ப்பட்டவராக இருந்த போது பாலியல் துஷ்பிரயோகத்தை அனுபவித்திருத்தல், மற்றும்
- 2010 ஜூன் 30 இற்கு முன் பிறந்திருத்தல், மற்றும்
- 2018 ஜூலை 1 இற்கு முன்பு, நீங்கள் நிறுவனமொன்றில் இருந்தபோது துஷ்பிரயோகம் நடந்திருத்தல், மற்றும்
- நீங்கள் ‘குறைதீர்ப்புத் திட்ட’ த்திற்கு விண்ணப்பிக்கும் வேளையில் ஒரு ஆஸ்திரேலிய பிரஜையாக அல்லது நிரந்தரக் குடியிருப்பாளராக இருத்தல் வேண்டும்.

உங்கள் சூழ்நிலைகளைப் பொறுத்து, பிற தகுதி விதிகள் பொருந்தலாம்.

## ‘குறைதீர்ப்புத் திட்ட’ த்திற்கு விண்ணப்பித்தல்

ஒரு காகிதப் படிவத்தின் மூலம் அல்லது myGov வழியாக ஆன்லைன் விண்ணப்பப் படிவத்தை நிரப்புவதன் மூலம் மக்கள் தேசிய ‘குறைதீர்ப்புத் திட்ட’ த்திற்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிப்பதைப் பற்றி யாரிடமாவது பேசுவதும், விண்ணப்பப் படிவத்தை நிரப்புவதில் அல்லது ஒரு வழங்கீட்டைப் பரிசீலிப்பதில் எவரிடமிருந்தேனும் உதவி பெறுவது பலருக்கும் பயனுள்ளதாக இருக்கலாம். ‘குறைதீர்ப்புத் திட்ட ஆதரவு சேவைகள்’ பாதுகாப்பான சூழலில் இலவச மற்றும் இரகசியப் பாதுகாப்பு மிக்க ஆதரவுதவியை வழங்குகின்றன.

## ஒரு ‘குறைதீர்ப்புத் திட்ட’ வழங்கீடு என்றால் என்ன?

ஒரு ‘குறைதீர்ப்புத் திட்ட’ வழங்கீட்டில் பின்வருவன உள்ளடங்கலாம்:

- ஒரு கொடுப்பனவு
- அந்தரங்கத் தன்மை வாய்ந்ததும் கலாசார ரீதியாக பாதுகாப்பானதுமான அறிவுரையாலோசனை
- ஒரு அமைப்பிடமிருந்து மன்னிப்பு கோரல் போன்ற நேரடியான தனிப்பட்ட பதில்.